[திரு. சி. பொன்னையன்] [2005 மார்ச் 2

காணப்படும் வைட்டமின்–A குறைபாடு நீங்குவதாகத் தெரியவருகின்ற பயன் மதிப்பீட்டின் அடிப்படையில், இத்திட்டம் அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் நீட்டிக்கப்படும் என்பதை நான் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குத் தரமான கல்வி, தரமான சொத்துக்கள், வருமானம் ஈட்டுவதற்கான திறன் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம், அவர்களுக்குச் சமூக, பொருளாதார அதிகார உரிமையை அளிக்க, இந்த அரசு, உறுதி பூண்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் அனைத்து ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்களுக்கும், புதியக் கட்டடம் கட்ட இந்த அரசு ஏற்கெனவே, அனுமதி வழங்கியுள்ளது என்பதை, இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நடப்பாண்டில், 44.10 கோடி ரூபாய் செலவில், 140 புதிய மாணவரில்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம், தனியார் வாடகைக் கட்டடங்களில் இதுவரை செயல்பட்டு வந்த மாணவரில்லங்கள் அனைத்திற்கும் நல்ல கட்டடங்களும், வசதிகளும் கிடைக்கும். இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின்கீழ், பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு 203,566 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில், 8.82 கோடி ரூபாய் செலவில், 50,600 மிதிவண்டிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில், பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுவிடும், வறிய ஆதிதிராவிட, பழங்குடியின மாணவிகளின் எண்ணிக்கையைக் குறைக்க, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 'ஊரக மாணவியர் ஊக்க உதவித் திட்டம்' செயல்படுத்தப்பட உள்ளது. 6 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் கூடிய, இந்தப் புதுமையான திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிட – பழங்குடியின மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த பேருதவியாக இருக்கும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்காக, இந்த அரசு, ஏற்கெனவே, பட்டமேற்படிப்புவரை இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன்.

பிற்பகல் 1–25

2004–2005 ஆம் ஆண்டில், நிலக் கொள்முதல் புதுமைத் திட்டத்தின் வாயிலாக, 7000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் பயனீட்டாளர்கள் பயனடைவர். 2005–2006 ஆம் ஆண்டில், இதே